# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

# 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

*(1998, யூன் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

1998, யூன் மாதம் 05 ஆந் தேதிய **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை: ரூபா 6.50** **தபாற் செலவு : ரூபா 2.50**

## 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

[1998 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச. வ.—ஒ. 17/97

## 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கக் குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தை திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :

1. இச்சட்டம் 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு "பிரதம நீதியரசர்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

> "சிறுபிள்ளை துஷ்பிரயோகம்" என்பது ஒரு சிறுபிள்ளை தொடர்பில் தவறொன்று புரியப்படுமிடத்து தண்டனைச் சட்டக்கோவையின் பிரிவு 286அ, 288, 288அ, 288ஆ, 308அ, 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ அல்லது 365ஆ என்பதன்கீழ் புரியப்பட்ட தவறொன்று எனப் பொருள்படும்"

(2) "ஆள்" என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்து பின்வரும் வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

> "பாதுகாப்பிடம்" என்பது ஒரு தடுப்புக்காவல் இல்லத்தை, மருத்துவமனையை அல்லது பராமரிப்புக்கும் கட்டுக்காப்பிற்குமான ஏதேனும் நிறுவனத்தை உள்ளடக்கும் ; "

2-டீ- 047398-1,100 (98/04)

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தில் 43அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

3. பிரிவு 43 என்பதனை உடனத்து பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 43அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"சிறுபிள்ளை துஷ்பிரயோகம் தொடர்பில் கைதுசெய்யப் பட்ட ஆட்கள் தொடர்பிலான விசேட ஏற்பாடுகள்.

43அ. (1) பிரிவுகள் 36, 37 என்பவற்றின் ஏற்பாடுகள் சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட ஆட்கள் தொடர்பில் ஏற்புடையனவாகமாட்டா.

(2) சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக சந்தேகிக்கப்பட்ட அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட எவரேனும் ஆளை பிடியாணையொன்றில்லாமல் கைதுசெய்யும் பொலிசு அலுவலர் ஒருவர் அநாவசியமான தாமதமின்றியும் கைதுசெய்யப் பட்ட இருபத்துநான்கு மணித்தியாலங்களுக் குள்ளும் அத்தகைய ஆளை வழக்கில் நியாயா திக்கம் கொண்ட நீதிவானொருவர் முன்னிலைக் குக் கொணர்தல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் கைதுசெய்யப் பட்ட ஆளொருவர் எந்த நீதிவானின் முன்னிலைக் குக் கொணரப்படுகின்றாரோ அந்த நீதிவான், பொலிசுக் கண்காணிப்பாளர் ஒருவரின் தரத்திற்குக் குறையாத பொலிசு அலுவலர் ஒருவரால் அல்லது அவர் இல்லாதவிடத்து அவர் சார்பில் செயலாற்றும் அலுவலரால், அத்தகைய சான்றிதழொன்று அணைக்கப்படு வதன்மீது ஆளை புலனாய்வுசெய்யும் நோக்கத் திற்கு தடுத்துவைப்பது அவசியம் என்ற பயன் பாட்டிற்கு மூன்று நாட்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கு அத்தகைய ஆளை பொலிசுக் கட்டுக்காப்பில் தடுத்துவைக்கப்படுவதை அனுமதித்து கட்டளையொன்றை ஆக்கலாம்.

(4) புலனாய்வு முடிவடைவதன்மீது அல்லது (3) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட தடுப்புக்காலம் முடிவடை வதன்மீது, இவற்றுள் எது முதலில் நிகழ் கின்றதோ அப்போது அத்தகைய ஆள் நீதிவான் முன்னிலைக்குக் கொணரப்படுதல் வேண்டும் என்பதுடன் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் அத்த கைய ஆளுக்கும் அவர் தொடர்பிலும் ஏற்புடை யனவாதலும் வேண்டும்.".

## 1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கை 3 முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

4. பின்வரும் புதிய பிரிவு, 451 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 451அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :- முதன்மைச் சட்டவாக்கத்தில் 451அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"பாதுகாப்பு இடமொன்றிற்கு பாதிக்கப்பட்டவரின் கட்டுக்காப்பை அளிப்பதற்கான ஆணைப் பத்திரம்.

415அ. (1) சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்கான குற்றப்பகர்வு அல்லது குற்றச்சாட்டு எந்த நீதிமன்றத்தில் அணைக்கப்பட்டுள்ளதோ அந்த நீதிமன்றத்திற்கு, எந்தச் சிறுபிள்ளை தொடர்பில் சிறுபிள்ளை துஷ்பிரயோகம் புரியப்பட்டுள்ளதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்தச் சிறுபிள்ளைக்கு பாதுகாப்பும் பராமரிப்பும் தேவைப்படுகின்றதெனத் தோன்றுமிடத்து, விளக்கம் முடிவுறாதிருக்கையில் அத்தகைய பிள்ளை பராமரிப்பிற்காகவும் பாதுகாப்பிற்காகவும் பாதுகாப்பு இடமொன்றில் வைக்கப்படுதல் வேண்டுமென நீதிமன்றம் கட்டளையிடலாம்.

(2) எந்தச் சிறுபிள்ளை தொடர்பில் சிறுபிள்ளை துஷ்பிரயோகம் புரியப்பட்டுள்ளதாக சார்த்துரைக்கப்படுகின்றதோ அந்தச் சிறுபிள்ளை பராமரிப்பிற்காகவும் பாதுகாப்பிற்காகவும் நிறுவனமொன்றில் வைக்கப்பட வேண்டுமென நீதிமன்றம் (1) ஆம் உட்பிரிவின்கீழ் கட்டளையொன்றை ஆக்குமிடத்து, பொருளளவில் இரண்டாம் அட்டவணையில் தரப்பட்டுள்ள படிவத்திலான ஆணைப்பத்திரமொன்று நீதிமன்றத்தால் கையொப்பமிடப்பட்டு நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு ஏற்புடைத்தாக்கப்படுதல் வேண்டும்.".

5. பின்வரும் புதிய பிரிவு 453 ஆம் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது முதன்மைச் சட்டவாக்கத்தின் 453அ என்னும் பிரிவு என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :- முதன்மைச் சட்டவாக்கத்தில் 453அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

"விளக்கங்களுக்கும் மேன்முறையீடுகளுக்கும் முந்துரிமை.

453அ. நீதிமன்றம் ஒவ்வொன்றும் சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக அத்தகைய நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றஞ்சாட்டப்பட்ட அல்லது குற்றப்பகர்வு செய்யப்பட்ட எவரேனும் ஆளின் விளக்கத்திற்கும் அத்துடன் சிறுபிள்ளை துஷ்பிரயோகத்திற்காக எவரேனும் ஆளின் குற்றத் தீர்ப்பினின்றெழுவதும் அத்தகைய குற்றத் தீர்ப்பின்மீது விதிக்கப்பட்ட ஏதேனும் தண்டனைத் தீர்ப்பிற்கு எதிரானதுமான விசாரணைக்கும் முந்துரிமை கொடுத்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

6. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை பின்வருமாறு இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :—

(1) பிரிவு 287 தொடர்பிலான பதிவுகளை உடனடுத்து பின்வரும் பதிவுகளை உட்புகுத்துவதன்மூலம் :—

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 288 | சிறுபிள்ளையை யாசகம் செய்வித்தல் அல்லது கூட்டுவித்தல். | பிடியாணையின்றி கைது செய்யலாம். | அழைப்பாணை | பிணையில் விடுவிக்கப்படற்பாலதல்ல. | ஒத்திணங்கப்படற்பாலதல்ல. | ஐந்தாண்டுகளை விஞ்சாமல் இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணம் ஒன்றுக்கும் ஆளாகலாம். | நீதிவான் நீதிமன்றம். |
| 288அ | பாலியல் உடலுறவுக்குக் கூட்டிவிடுபவர்களாகச் செயலாற்றுவதற்கு சிறுபிள்ளைகளை வாடகைக்கு விடுதல் அல்லது தொழிலுக்கமர்த்துதல். | அதே | அதே | அதே | அதே | இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப் பணமொன்றுக்கும் ஆளாகலாம். | |
| 288ஆ | மட்டுப்படுத்தப்பட்ட பொருட்களில் வியாபாரம் செய்வதற்கு சிறுபிள்ளைகளை வாடகைக்கு விடுதல் அல்லது தொழிலுக்கமர்த்துதல். | அதே | அதே | அதே | அதே | ஐந்தாண்டுகளுக்குக் குறையாததும் ஏழு ஆண்டுகளை விஞ்சாததுமான இருவகையிலொருவகை மறியற்றண்டனை அத்துடன் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம். | |

(2) முந்நூற்றியிரண்டாம் பிரிவு தொடர்பான பதிவுகளை நீக்குவதன்மூலம்.

7. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றைந்தாம் ஆண்டின் 4 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணை அதன் 11 ஆம் இலக்க படிவத்தை அடுத்து பின்வரும் படிவத்தை இத்தால் இடுவதன்மூலம் மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்திற்கான இரண்டாம் அட்டவணையைத் திருத்துதல்.

"இல. 11 அ

பாதுகாப்பு இடத்திற்குப் பாரப்படுத்தும் ஆணைப்பத்திரப் படிவம்

..............................................................................மேல்நீதிமன்றத்தில்
(அல்லது.......................................................................இல் உள்ள நீதிவான் நீதிமன்றம்)

..................................பிசுக்காலுக்கும்................................
முகாமையாளருக்கும்

(பாதுகாப்பு இடத்தின் பெயர்)

.............................................என்பவர்.................................
தவறுக்காக இந்நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றப்பகர்வு செய்யப்பட்டுள்ளார்/ குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார் ஆதலாலும், அத்துடன் சொல்லப்பட்ட தவறு................................... என்பவர் தொடர்பில் புரியப்பட்டுள்ளதாக சேர்த்துரைக்கப்பட்டுள்ளதாதலாலும் அத்தகைய தவறின் விளக்கம் முடிவுறாதிருக்கையில் சொல்லப்பட்ட ....................................என்பவருக்கு பராமரிப்பும் பாதுகாப்பும் தேவைப்படுகின்றதாதலாலும் ;

ஆதலால் இது, சொல்லப்பட்ட................................... என்பவரைக் கூட்டிச் சென்று, அவரை அதன் முகாமையாளரிடம் தங்கள் கைப்பட சான்றுப்படுத்தப்பட்ட இந்த ஆணைப்பத்திரத்தின் பிரதியுடன் பாதுகாப்பாக ஒப்படைக்குமாறு உமக்குக் கட்டளையிடுவதற்காகும், அத்துடன் சொல்லப்பட்ட...................................... என்பவரை உமது கட்டுக்காப்பில் ஏற்றுக்கொள்ளுமாறும் சொல்லப்பட்ட தவறின் விளக்கம் முடிவுறாதிருக்கையில் அவரை உமது பராமரிப்பிலும் பாதுகாப்பிலும் வைத்திருக்குமாறு சொல்லப்பட்ட...........................................
முகாமையாளராகிய உமக்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

19......ஆம் ஆண்டு.................. மாதம்........................ ஆம் நாளாகிய இன்று எனது கைப்பட வழங்கப்பட்டது.

ஒப்பம்
மேல்நீதிமன்ற நீதிபதி/ நீதிவான்"

8. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்குமிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட்,
கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.